# உழைப்பாளர் தினம்!

உழைப்பில்லாமல் உயர்வில்லை;
உயர்வில்லாமல் பெருமையில்லை;
பெருமையில்லாமல் மகிழ்ச்சியில்லை
மகிழ்ச்சியில்லாமல் வளர்ச்சியில்லை;
வளர்ச்சியில்லாமல் வாழ்க்கையில்லை;
வாழ்க்கையில்லாமல் தேடலில்லை;
தேடலில்லாமல் உழைப்புமில்லை;
உழைப்பே வாழ்வின் விழி;
உழைப்பாளர் தின வாழ்த்துக்கள்!
01-05-2016 10 AM

தொழிலை ஆள்வதனால், அவன் தொழிலாளி!
அழியாப்பெருநிதி உழைப்பின் முகவரி!
மேழிச்செல்வமே மேதினி ஆளுமே!
ஆழிக்கடல் தரும் அழியாநிதியமும்,
வாழிய யென்றே 'மே 'தினம் சொல்லும்!
- **கவிவளவன். 01-05-2017**

**கடற்கரை கவியரங்கு-613**
**நாள்: 01-05-2022**

## 'மே' தினம்!

உழைப்பின் முகவரி உலகம்
அறிந்திடப் பிறந்தது 'மே' தினம்!
தழைக்கும் வாழ்வியல் என்றும்
தடுமாறாது இருக்கச் செய்யும்;
உழைத்தல் என்பது வாழ்வின்
உயிர்நிலைத் தேடலே யன்றோ!
மழையும் வெயிலும் போலே
மண்ணியம் காப்பது உழைப்பே!

மன்றினில் யாவும் நிலைத்தல்,
உயிர்களின் உழைப்பால் தானே!
தென்றலின் வருடல் போலே,
திகழ்ந்திடும் நிலைகள் யாவும்!
ஒன்றை யொன்று அணைத்தே;
வாழ்ந்திடல் உலகின் இயலே!
மன்னும் உயிர்கள் யாவும்,
மருவிலாது இருத்தல் பயனே!
**கவிவளவன்** ஆகிய **கு.ப. அசோகன்**
01-05-2022 (12.30 PM)

**'மே' தின வாழ்த்துக்கள்**

உழைப்பின் முகவரி சொன்ன,
உன்னத நாளாம் இன்று!
அழைக்கும் கரங்கள் தம்மை;
அணைந்தே மகிழ்வு கொள்வீர்!
தழைக்கும் அன்பின் பின்னே,
தன்னிலை உயர்வைக் கூறும்!
உழைப்பே வாழ்வியல் கூறும்,
வழிமுறை யென்றே கொள்வோம்!
**-- கவிவளவன் 01-05-2019**

உழைப்பின் முகவரி உலகம் அறிந்திட,
**தொழிலாளர் தின** மெனத் தொடங்கிய நாளாம்!
உயிர்களின் உழைப்பு உலகம் உய்ய!
மனிதனின் உழைப்பு மானுடம் மிளிர!
அனைவருக்கும்
**தொழிலாளர்தின வாழ்த்துக்கள்!**
*01-05-2022*

**உழைப்பாளர் தினம்!**
உழைப்பின் முகவரியை
உலகம் எழுதிய நன்நாள்!
பிழைப்பே என்னும்
பேதமை களைந்து,
உழைப்பால் வாழ்வியல்
உன்னதம் அறிந்தோம்!
மழைபோல் வாழ்வோர்;
மனிதரிலும் உண்டே!
**- கவிவளவன்** 01-05-2021